பாராளுமன்ற வெளியீட்டு மாலா இல :- **492**

நிறுவனத்தின் பெயர் :- **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாரளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

பாராளுமன்ற அரச நிதி சம்பந்தமான தெரிவுக் குழுவினால் சபையில்
சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை சம்பந்தமாக
நிலையியற் கட்டளை இல 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின்
அவதானிப்பு மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
சம்பந்தமாக பாரளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 492

நிறுவனத்தின் பெயர் :- பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.

| இல | அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள். | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை. |
|---|---|---|
| 01. | 01/2017 சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்களைப் பதிவு செய்யாமை. | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவுகள் மற்றும் அகற்றல்கள் எதுவும் இடம்பெறவில்லை. கொம்ப்ட்ரோலர் ஜெனரல் திணைக்களத்தினால் NFAMS அமைப்பைச் செயல்படுத்துவது தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தில், 2023 ஆம் ஆண்டிலிருந்து வாகனங்கள் தொடர்பான விபரங்களை மாத்திரம் NFAMS அமைப்பில் உட்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே, ஏனைய சொத்துக்கள் தொடர்பான புதிய கொள்வனவுகள் மற்றும் புதிய அகற்றல்கள் எவையும் அறிக்கையிடப்படவில்லை. எதிர்காலத்தில் அனைத்து சொத்துக்கள் தொடர்பான விபரங்களையும் NFAMS அமைப்பில் உள்ளடக்க வேண்டும் எனவும், அது தொடர்பான அறிவுறுத்தல்கள் எதிர்காலத்தில் வழங்கப்படும் எனவும் NFAMS அமைப்பைச் செயல்படுத்துவது குறித்து அறிவுறுத்தல் வழங்கும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. அதற்கமைய, 01/2017 சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் திணைக்களத்திற்கு அறிக்கைகளாக அனுப்பப்படவில்லை என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.<br><br>அதற்கமைய, கொம்ப்ட்ரோலர் ஜெனரல் திணைக்களத்தினால் வாகனங்களுக்கு மேலதிகமாக ஏனைய அனைத்துச் சொத்துப் பிரிவுகளின் விபரங்களையும் NFAMS அமைப்பில் உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |
| 02. | அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் இல்லாமை. | தற்போது அமைச்சிடம் உள்ள அனைத்து வாகனங்களினதும் பதிவு செய்யப்பட்ட உரிமை அமைச்சுக்கு கிடைத்துள்ளது. |
| 03. | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படாமை. | பாதுகாப்பு காரணங்களினால் குழும வாகனங்களில் மாத்திரம் அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. |

| இல | அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள். | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை. |
|---|---|---|
| 04. | பாவனைக்கு உதவாத வாகனம் ஒன்று 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றப்படாமை. | பாவனைக்குதவாத வாகனங்கள் எதுவும் இல்லை. |
| 05. | அனைத்து வாகனங்களினதும் பயணப் பதிவேடுகள் (Log Books) இற்றைப்படுத்தப்படாமை. | தற்போது பயணப் பதிவேடுகள் அனைத்தும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |
| 06. | விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. | தற்போது விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 07. | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையாக உள்ள கடன் பாக்கிகள் காணப்பட்டமை. | கடன் நிலுவைகள் தற்போது இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன. |
| 08. | அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி ஊழியர்களைப் பதவிகளுக்குப் பணியமர்த்தியமை. | இந்த அமைச்சிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு அமைவாக, தற்போது சேவையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், அலுவலக பணி உதவியாளர் மற்றும் சாரதி பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதால், அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி ஊழியர்கள் எவரும் பணியமர்த்தப்படவில்லை. அவ்வெற்றிடங்கள் தொடர்பாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2024.06.07 ஆம் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 14/2022(IV) இன் 2.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தர்களை வெற்றிடங்களாகக் கருதி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படமேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**இரண்டாம் பகுதி**

| குறைபாடு / விபரம் | தற்போதைய நிலைமை |
|---|---|
| நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், தகைமைக்கு உட்பட்ட மட்டத்திலான / மறுப்புரை மட்டத்திலான / பாரதூரமான மட்டத்திலானதாகக் காணப்பட்டமை. | 2023 ஆம் ஆண்டில் அமைச்சின் இறுதி கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயமானது, தகைமைக்கு உட்பட்ட ஒரு அபிப்பிராயமாகும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |

**கே. எம். ஆனந்த விஜேபால**

**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்**